ஒவ்வொரு ஞாயிறு
மாலை 5-15 மணிக்கு
ஒலிக்கிறது......
எஸ். எஸ். கணேசபிள்ளையின்
"அமுதசுரபி"
வானொலி நாடகம்
உங்கள் அபிமான நிறுவனம்
வழங்குகிறது.
சி.சின்னத்துரை அன் பிரதர்
யாழ்ப்பாணம் - போன்: 284

★ 6 பக்கங்கள் விலை சதம் 40

# ஈழநாடு
The EELANADU

மலர்: 20 ஐப்பசி 10 ஜுல்ஹஜ்: 24 இதழ்: 258
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 27 10 78

யாழ். நகரில்
போட்டோஸ்டாற் பிரதிகள்
வெளிநாட்டுக் கடதாசியில்
சாதாரண சைஸ்
ரூபா 1/- மட்டுமே
சுப்ப கனன்
கொப்பி சேவிஸ்
13. நவீனசந்தை (மேல்மாடி)
யாழ்ப்பாணம்.

UNIVERSITY OF SRI LANKA - JAFFNA CAMPUS
RECEIVED
13-10-78
PERIODICALS DIVISION
LIBRARY

# தமிழ்நாட்டில் ஜனாதிபதிக்கு அமோக வரவேற்பு!

## எம். ஜி. ஆரும் சகாக்களும் வந்திருந்தனர்

சென்னை, அக் 27

**இலங்கை ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன நேற்று மாலை சென்னை வந்தடைந்த பொழுது அவருக்கு மகத்தான வரவேற்பு அளிக்கப்பட்டது.**

இலங்கை ஜனாதிபதியும் அவரது குழுவினரும் நேற்று மாலை 5-15 மணிக்கு சென்னை மீனம்பாக்கம் விமான நிலையம் வந்தடைந்தபோது தமிழ்நாடு முதலமைச்சர் திரு எம். ஜி. இராமச்சந்திரனும் சக அமைச்சர்களும் அன்புடன் வரவேற்றனர். திரு ராமச்சந்திரன் விமானத்தின் வாயில்வரை சென்று திரு. ஜயவர்தனவை வரவேற்றார்.

திரு. ஜயவர்த்தனவின் எளிமையான தோற்றமும் கவர்ச்சியான நடவடிக்கைகளும் மக்களைப் பெரிதாகக் கவர்ந்ததாக நிருபர்கள் அறிவித்தனர்.

திரு. ஜயவர்த்தனவுடன் அவரது துணைவியாரும், செயலாளர் திரு. மெனிக்டிவல, அந்தரங்க செயலாளர் திரு. நிகால் வீரதுங்க ஆகியவர்களும் வந்துள்ளனர்.

திரு ஜயவர்தன ஒருநாள் சென்னையில் தங்கிய பின்னர் இன்று புதுடில்லிக்குப் பயணமாகிறார்.

புதுடில்லியில் அவரை இந்திய பிரதமர் திரு. மொரார்ஜி தேசாய், ஜனாதிபதி திரு. சஞ்சீவரெட்டி, வெளிநாட்டு மந்திரி திரு. வாஜ்பாயி முதலியோர் வரவேற்பார்கள்.

உத்தியோகபூர்வமாக இரண்டுவார காலம் இந்தியாவில் இருந்த பின்னர் இலங்கை ஜனாதிபதி பூட்டானுக்கு விஜயம் செய்வார். அங்கு புத்தபெருமான் பிறந்த இடமான லும்பினிக்கும் அவர் யாத்திரை மேற்கொள்வார்.

### தொடர்புகள் பலப்படும்

திரு. ஜயவர்த்தன நேற்று இந்தியாவுக்கு கட்டுநாயக்கா விமானநிலையத்திலிருந்துவிமானத்தில் புறப்பட்டபோது அவரை அமைச்சர்களும், முப்படைத் தலைவர்களும் இதர பிரமுகர்களும் அன்புடன் வழியனுப்பிவைத்தனர் வழியனுப்பும் நிகழ்ச்சிகள் மிகவும் எளிமையாக நடைபெற்றது.

இந்தியாவுக்குத் தாம் மேற்கொள்ளும் விஜயம் இருநாடுகளுக்குமிடையில் உள்ள சிநேகபூர்வமான தொடர்புகளை மேலும் வலுப்படுத்தும் என்று திரு. ஜயவர்த்தன புறப்படுவதற்குமுன் பத்தி

(6-ம் பக்கம் பார்க்க)

## பாண்டிச்சேரி துணை சபாநாயகர் ராஜினாமா

[சென்னை]

பாண்டிச்சேரி சட்டசபை துணை சபா நாயகர் திரு. பழனிநாதன் தமது பதவியை ராஜினாமாச் செய்துவிட்டார். தமது ராஜினாமா கடிதத்தை சபா நாயகருக்கு அனுப்பிவிட்டதாகக் கூறிய திரு. பழனிநாதன், கட்சிப் பணியில் தமது முழுநேரத்தையும் செலவிடப்போவதாகக் கூறினர்.

துணைசபாநாயகர் திரு. பழனிநாதனின் ராஜிமா தமக்கு ஆச்சரியமளிப்பதாகவிருக்கின்றது என புதுச்சேரி முதலமைச்சர் திரு. ராமசாமி இன்று கூறினர்.

## நீதி அமைச்சர் இன்று யாழ். விஜயம்

[யாழ்ப்பாணம்]

நீதி அமைச்சர் திரு. கே. டபிள்யூ. தேவநாயகம் இன்று யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்கின்றார்.

யாழ். கச்சேரியில் நடைபெறும் விசேஷ மகாநாட்டில் கலந்து கொள்வதுடன், நீதி அமைச்சர் காரைநகர் ஸீ-நோர் அபிவிருத்தித் திட்டத்தையும் இன்று பார்வையிடுவார்.

### வவனியாவில் விமானத்தளம்

[வவனியா]

இலங்கை விமானப்படையினால் வவனியாவில் அமைக்கப்பட்டுள்ள நிரந்தர விமானத்தளத்தை நீதியமைச்சர் திரு. கே. டபிள்யூ. தேவநாயகம் இன்று வெள்ளிக்கிழமை திறந்து வைப்பார். [உ]

## ஊழல், மோசடி, குற்றச்சாட்டு முகாமையாளர் மீது நடவடிக்கை

(தெல்லிப்பழை)

ஊழல், மோசடி குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக, தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச்சங்க நுகர்ச்சிப் பகுதி முகாமையாளர் தற்காலிகமாக வேலைநீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

சுமார் பத்தாயிரம் ரூபா பெறுமதியான சீமெந்து மோசடி சம்பந்தமாகவும் தேயிலை கொள்வனவில் இடம்பெற்ற ஊழல் காரணமாகவும் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் தொடர்பாகவே மேற்படி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாம்.

தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்க நுகர்ச்சிப்பகுதி முகாமையாளர் திரு. எஸ். மார்க்கண்டு இதுசம்பந்தமாக இயக்குனர்சபையால் தற்காலிக வேலைநீக்கம்செய்யப்பட்டுள்ளார்.

சீமெந்துக்கு பலத்த தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளநேரத்தில் சீமெந்துமோசடி நடைபெற்றமையிட்டு பாவனையாளர்கள் அதிருப்தி தெரிவித்துள்ளனர்.

"துணிகள், சப்பாத்துகள் பெற்றபோதும்

# புத்திரசிகாமணி ஒருநாளும் யுனிபோம் அணிந்ததில்லை"

## பல்கலைக்கழக கமிஷன் முன் லோகநாதன் தொடர்ந்து சாட்சியம்

(யாழ்ப்பாணம்)

'யாழ்ப்பாணம் வளாக பாதுகாப்பு பொறுப்பதிகாரி எம். புத்திரசிகாமணி ஒருநாள் வட்டுக்கோட்டை வளாகத்திற்கு வந்தார். நான் 'யூனிபோம்' அணிந்திராததினால் எனக்கு 25 ரூபா அபராதம் விதித்தார். அவர் நியமனம் பெற்ற காலம் முதல் யூனிபோமுக்கான துணிகள், சப்பாத்துகள் பெற்றும் ஒரு நாள்கூட 'யூனிபோம்' அணிந்ததில்லை

பல்கலைக்கழக விசாரணை கமிஷன் முன் சாட்சியமளித்த ராஜகிரி ஆயுர் வேத வைத்திய நிலைய பாதுகாப்பு இன்ஸ்பெக்டர் வ. லோகநாதன் மேற்கண்டவாறு கூறினர்.

கமிஷனர் டி. ஜி. தயாரத்தின முன்னிலையில் மூன்றுவது தினமாக விசாரணை நடைபெற்றது.

பொறுப்பதிகாரி புத்திரசிகாமணி சார்பில் ஆஜரான சட்டத்தரணி லெஸ்லி பார்லட் குறுக்குவிசாரணை செய்தார்.

சுதந்திரகட்சி ஆட்சிகாலத்தில், எம் பியின் கடிதமூலம் நீர் நியமிக்கப்பட்டீர்? என சட்டத்தரணி கூறியபோது சாட்சியமளித்த லோகநாதன் தான் 74-ம் ஆண்டுமுதல் யூ என். பி ஆதரவாளன் என்றும், 77-ம் ஆண்டு தேர்தலில் வட்டுக்கோட்டை தொகுதியில் யூ. என். பி. அபேட்சகராக போட்டியிட்ட இரத்தின சிவகத்தின் பெயரை தான் வழிமொழிந்ததாகவும் கூறி அதற்கு அத்தாட்சியாக தம்மிடமிருந்த அபேட்சகர்கள் பற்றி ஆங்கில பத்திரிகைகளில் வெளிவந்த அறிவித்தலை சமர்ப்பித்தார்.

தான் எம். பியின் கடித மூலம் தான் நியமனம் பெற்றதாக நிரூபித்தால் உடனடியாக தமது பதவியை ராஜினமா செய்வதாகவும் எம். லோகநாதன் கூறினர்.

சட்டத்தரணி பார்லட், அதனை நிரூபிக்க முடியாதென்றும், ஏனெனில் எம். பிக்களின் சிபார்சுக் கடிதங்கள் 'பைலில்' போடப்படுவதில்லையென்றும், அவை உடனுக்குடன் கிழித்தெறியப் பட்டுவிடும் என்றும் கூறிய போது, அதுபற்றி தனக்குத் தெரியாது என சாட்சி கூறினர்.

சட்டத்தரணி பார்லட் தொடர்ந்து குறுக்கு விசாரணை செய்தார்.

சட்: பொலநறுவா போனதாகக் கூறினீர்?-ஆம்.

சட்: அது உண்மையா? -ஆம்.

சட்: எப்போ போனீர்? -13-ம் திகதி.

சட்: எப்ப திரும்பினீர்? -18-ம் திகதி.

சட்: அன்று குமார் விஜய சிங்கா வந்தார்களா?- யாழ். பஸ் நிலையம் மட்டும் வந்தார்கள்.

சட்: குருநாகலுக்கு அவர்களின் நண்பர்கள் வந்தது நிச்சயம்? ஆம்.

சட்: யார் அவர்கள்? -அன்ரன்நிகால்.

சட்: பொலனநறுவா சம்பவம் நடந்த தேதி என்ன? -ஒரு வருடத்துக்குமுன் நடந்ததால் ஞாபகமில்லை. சன்சோனிக் கமிஷன் முன் சாட்சியமளித்த பலர் தேதிபற்றிக் கூறவில்லை..

[சிரிப்பு]

சட்: 13ம் தேதி பொலனறுவா போனீரா? -ஆம்

சட்: 16ம் திகதி லீவுக் கடிதம் எப்படிக்கொடுத்தீர்?-தபாலில் அனுப்பியிருக்கலாம்.

சட்: பொலநறுவாவில் யார்வீட்டில் நின்றீர்? -அன்ரன் வீட்டில்

சட்: உமது கடன் விண்ணப்பப்பத்திரத்தை உதவிப் பதிவாளர் பொய்யானதென்று நிராகரித்தார்? -பொறுப்பதிகாரி அதனை ரத்துச்செய்தால் அவருக்கு ரத்துச்செயய அதிகாரம் இல்லை. எனக்குத்தான் எனது விண்ணப்பத்தை ரத்துச்செய்ய அதிகாரம் உண்டு.

சட்; வேறு 30 பேர் கடன் விண்ணப்பம் கோரியிருந்தார்கள்? -தெரியாது

(6-ம் பக்கம் பார்க்க)

## வெட்டிக் கொலை

(புத்தளம்)

புத்தளத்தைச் சேர்ந்த ஒருவர் கத்தியால் வெட்டிக் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பாக நாகூப் என்பவர் தேடப்பட்டு வருகிறார். (உ)

## மர்மக் கொலை

[கொழும்பு]

கல்கிசையைச் சேர்ந்த பீட்டர் ஜெயவர்த்தன என்பவர் கொலை செய்யப்பட்டுள்ளார்.

இம்மர்மக்கொலை தொடர்பாக இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை.

## ஈட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில் ஈடு/826 இலக்க வழக்கில் வாதிகளாகிய வட்டுக்கோட்டை கிழக்கு எம். கந்தஞானிக்கும், பெண் மகேஸ்வரிக்கும் விற்பனவு திகதி வரை போகவேண்டித் தீர்ந்த தொகை 1719 ரூபா 79 சதமும், வழக்குச்செலவு 354 ரூபா 30 சதமும் பின்னர் ஏற்பட்ட விற்பனவுச் சலார்களும் இத்தொகையை பிரதிவாதியாகிய அராலி கிழக்கு அம்மன் கோவிலடி சரவணமுத்து செல்லத்துரையிடம் அறவிடுதற்காக எனக்களித்த அதிகாரத்தின்படி வழக்கில் சம்பந்தப்பட்டகீழ் விபரிக்கப்படும் ஆதனம் 22-11-1978 புதன்கிழமை காலை 10 மணி தொடக்கம் அவ்வாதனத்தில்நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

### ஆதனவிபரம்

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் வலிகாமம் மேற்குப் பகுதி வட்டுக்கோட்டை கோவிற்பற்று அராலி கிழக்கிறை ''பத்தன்வயல்'' நெற்பரப்பு 5 இதன் எல்லைக்காரர்கள் கிழக்கு-ரோட், வடக்கு கந்தன் சின்னத்தம்பி, மேற்கு கந்தையா மகள் சின்னம்மா. தெற்கு பத்திரகாளி அம்மன் கோவிலாதனம் இதடங்கலும்.

சி. மகாதேவன்,
விற்பனை ஆணையாளர்.

553, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம். 0676


சுவையான தேநீருக்கு
அதிக தேநீர், சுவையான ரொபி
தயாரிப்பதற்கு
எல்லோரும் விரும்பி வாங்குவது

**பல்கன் டின்பால்**

FALCON BRAND
SWEETENED MILK

இன்றைய இல்லத்தரசிகளின் இனிய தேர்வு
பல்கன்......பல்கன்......பல்கன்.....
வியாபாரிகளுக்கு விசேட கழிவுண்டு!
வடஇலங்கையின் நேரடி இறக்குமதியாளர்கள்:

**முகமதலி அப்துலலி**

5&7, பெரியகடை, யாழ்ப்பாணம்.
போன்: 515



விவசாயிகளே! வாகன உரிமையாளர்களே!!
உங்களுக்குத் தேவையான
∴ உரவகைகள்
இறக்குமதிசெய்யப்பட்ட
∴ ரயர், ரியூப் வகைகள்
∴ சீமெந்து
∴ பாலுணவு வகைகள்
இன்றே நாடுங்கள்:

**ச. வி. முருகேசு**

நம். 154, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தந்தி: எஸ்.வி.எம். தொலைபேசி: 564
0678



**தீபாவளி மலிவு விற்பனை**

பண்டத்தரிப்புப் பரிஷ் ப. நோ. கூ. சங்க
தலைமை அலுவலகத்திற்கு அருகாமையில்

செயற்கைப் பட்டுச் சேலைகள்
வொயில் சேலைகள்
சூட்டிங் வகைகள்
சேட் வகைகள்
சிறுவர் உடைகள்
சிலவற்றில் 50% வரை விலைகள் குறைக்கப்பட்டுள்ளன.

ம. யோசேப்பு,
பதில் பொதுமுகாமையாளர்.

பண்டத்தரிப்பு பரிஷ் ப. நோ. கூ. சங்கம்,
பண்டத்தரிப்பு. 0680


## பண்ணைத் தொழில்துறை வெற்றி

(உடுப்பிட்டி)

நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தின் பண்ணைத் தொழிற்துறை பெரும்வெற்றி அளித்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இம்மகாவித்தியாலயத்தில் கோழிப்பண்ணை, மாட்டுப் பண்ணை ஆகியன சிறந்த முறையில் நடாத்தப்பட்டு வருவதாக கல்வி அதிகாரிகள் பாராட்டியுள்ளனர்.

யாழ். மாவட்டத்திலேயே கோழிப்பண்ணையையும் சிறந்த கறவைஇனப் பசுக்களைக் கொண்ட மாட்டுப் பண்ணைகளையும் பெரியளவில் நடாத்தி வரும் ஒரே ஒரு மகாவித்தியாலயம் இது என்பது குறிப்பிடத்தக்கது. (உ)

## கேள்வி விளம்பரம்

### அல்லைப்பிட்டிக் கிரர்மசபை

1978-ம் ஆண்டு நவம்பர் மாதம் 15-ந் திகதி புதன் கிழமை காலை 10-00 மணி வரையும் அல்லைப்பிட்டி கிராமாட்சிமன்ற விசேட ஆணையாளரால் கீழ்க்காணும் வேலைக்கான சீல் வைத்த கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விகள் பதிவுத் தபால்மூலம் அல்லைப்பிட்டி கிராமாட்சி மன்ற விசேட ஆணையாளருக்கும், பிரதி யாழ்ப்பாணம் உள்ளூராட்சி உதவி ஆணையாளருக்கும் அனுப்பிவைத்தல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மூலையில் என்ன வேலைக்கான கேள்வி யென எழுதப்படல்வேண்டும்.

கேள்விப் பத்திரங்கள் 1978-ம் ஆண்டு நவம்பர் மாதம் 7-ம திகதி செவ்வாய்க் கிழமை மாலை 3 மணிவரையும் பெற்றுக்கொள்ளலாம்.

கேள்வி வைப்புப் பணம் ரூபா 50/-ம், கேள்விப்பத்திரப் பணம் ரூபா 10/-ம் செலுத்தி கேள்விப்பத்திரத்தைப் பெற்றுக்கொள்ளலாம். கேள்விப்பத்திரப் பணம் திருப்பிச் செலுத்தப்படமாட்டாது.

1. நூல் நிலையக் கட்டிடம்

விசேட ஆணையாளர்,
அல்லைப்பிட்டி,
கிராமாட்சிமன்றம்.

கிராமாட்சிமன்ற
அலுவலகம்,
அல்லைப்பிட்டி,
23-10-1978.

0681

## தென்மராட்சி மேற்கு ப. நோ. கூ. சங்கம், கைதடி.

## கேள்வி விண்ணப்பம்

6 தொன் இசுசு (Isuzu) லொறி பொடி அடிப்பதற்காக கேள்வி விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கேள்வி விண்ணப்பங்கள் யாவும் ''பொதுமுகாமையாளர், தென்மராட்சி மேற்கு ப.நோ. கூ. சங்கம், கைதடி'' என்ற விலாசத்திற்கு 15-11-1978 புதன்கிழமை அன்று அல்லது அதற்கு முன்பாகக் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பப்படல்வேண்டும். தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''லொறிபொடி அடிப்பதற்கான கேள்வி விண்ணப்பம்'' என எழுதப்படல்வேண்டும். மேலதிக விபரங்களை சங்க காரியாலய நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

**பொதுமுகாமையாளர்**

தென்மராட்சி மேற்கு
ப. நோ. கூ. சங்கம்,
கைதடி.
1978-10-25. 0677

## இந்திய-பாக். 2-வதுடெஸ்ட் இன்று

[லாகூர்]

இந்திய-பாக் 2வது கிரிக்கட் டெஸ்ட் இன்று வெள்ளிக்கிழமை லாகூரில் ஆரம்பமாகிறது.

பைசலாபாத்தில் நடைபெற்ற முதலாவது டெஸ்ட் வெற்றிதோல்வியின்றி முடிவடைந்தது தெரிந்ததே. [இ]

## முதற்கண் முற்றுகும் ஆணைபற்றிய அறிவித்தல்

பருத்தித்துறை
மாவட்ட நீதிமன்றில்

காலஞ்சென்ற புலோலி மேற்கு சண்முகம் கணபதிப்பிள்ளையினதும் பெண் சிவபாக்கியத்தினதும் ஒருமித்த மரணசாதனவிடயத்தில்.

மரணமெய்தியவர் மரண சாதன) இல. 1047
நியாயாதிக்கம்)

கணபதிப்பிள்ளை சண்முகநாதன், புலோலி மேற்கு, பருத்தித்துறை.
மனுதாரர்.

மேலே குறித்த இலக்க முடைய வழக்கு மேற்குறித்த மரணமெய்தியவரின் மரண சாதனத்தை எண்பிப்பதற்காக மேற்படி நீதிமன்றிலே தொடரப்பட்டுள்ளதெனவும் 1978ம் ஆண்டு கார்த்திகை மாதம் 03ம் திகதியன்று அதற்கிணங்க அதில் முதற்கண் முற்றுகும் ஆணை பதியப்பட்டுள்ளதெனவும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

நீதிமன்றின் ஆணைப்படி.
க. விஸ்வலிங்கம்,
பதிவாளர்,
மாவட்ட நீதிமன்று,
பருத்தித்துறை.

1978ம் ஆண்டு ஐப்பசி மாதம் 13ம் நாளன்று திகதியிடப்பட்டது.

வரைவு:
மு. க. முத்துக்குமார்,
மனுதாரின் சட்டத்தரணி.
பருத்தித்துறை. 0679

## வரி விளம்பரம்

### தேவை

பெண் கசியர் தேவை. சொந்தக் கையெழுத்தில் உடன் விண்ணப்பிக்கவும். ஆர். எஸ். அச்சகம், 149, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். 0683

### வகுப்புகள்

1-11-78 முதல் எமது கல்விநிலையத்தில் மின்னியல் வகுப்புக்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன. கூடிய செய்முறை வகுப்புக்கள் அடங்கியது. விபரங்கட்கு: Institute of Air Conditioning, 615, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 0652

## சமத்துவம்

(யாழ்ப்பாணம்)

சுன்னாகத்தில், இதுவரை காலமும், பெரும்பான்மை சமூகத்தினருக்கென நடைபெற்றுவந்த சிகையலங்கார நிலையம் ஒன்றும், சலவைத் தொழிற்சாலை ஒன்றும், சகலருக்கும் திறந்துவிடப்பட்டுள்ளது

சுன்னாகம் காந்திருபன் சன சமூகநிலையம் மற்றும் முற்போக்குவாலிபர்களின் முயற்சியால் அமைதியான முறையில் சகலருக்கும் திறந்துவிடப்பட்டுள்ளது.

## எச்சரித்து விடுதலை

(புலோலி)

பருத்தித்துறை ஸ்ரீவல்லிபுரக்கோவில் உற்சவகாலங்களில் சுகாதாரக்கேடான முறையில் உணவுப்பண்டங்களை பரப்பிவைத்து விற்பனை செய்தார்கள் என்ற குற்றத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட ஆறு உணவுப் பண்டம் விற்கும் வியாபாரிகளையும் பருத்தித்துறை நீதிபதி திரு. கே. ஞானச்சந்திரன் கடுமையாக எச்சரிக்கைசெய்து விடுதலை செய்தார். (க)

## நீதிமன்ற விற்பனவு விளம்பரம்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்

வழக்கு இலக்கம் ஈடு /1133

1. சின்னையா செல்லையாவும் பெண்
2. பூபதியும் உரும்பராய் கிழக்கு

வழக்காளிகள்

எதிராக

கந்தையா விசுவலிங்கம், இணுவில் கிழக்கு

எதிராளி

மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில் எனக்குக் கிடைத்த நீதிமன்றக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் காணியை 1978-ம் ஆண்டு கார்த்திகைமாதம் 16-ந் திகதி (16-11-78) வியாழக்கிழமை முற்பகல் 10-30 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### தீர்வைத் தொகை

மேற்குறித்த எதிராளி குறித்த வழக்காளிகளுக்கு ரூபா 5420/-வும், மேலும் 3500/- வருடமொன்றுக்கு நூற்றுக்கு 12 வட்டி வீதம் வழக்கு அணைத்த திகதியாகிய 1976-ம் ஆண்டு பங்குனிமாதம் 29-ந் திகதியிலிருந்து தீர்வைத் திகதியாகிய 1976ம் ஆண்டு ஆவணி மாதம் 6-ந் திகதிவரையுமான வட்டியும் அதன்பின் தீர்வை முழுத்தொகைக்கும் இறுக்கப்படும்வரை, சட்டவட்டியான வருடமொன்றுக்கு நூற்றுக்கு—வீத வட்டியும் வழக்குச்செலவு ரூபா 573/30 கொடுக்க வேண்டியிருப்பதாலும் இதில் எதிராளி ரூபா 1500/ ஐ 4-10-77ல் வழக்காளிகளிடம் கொடுத்திருக்கிறார்.

### குறித்த ஆதனடாப்பு

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி நல்லூர்க் கோவிற்பற்று கோண்டாவில் இறை ''இந்தனை'' நில 9½, ஆனால் அளவின்படி நில 8¾ இதில் நடுப்புறமாக வடக்கே நாலுமுழ அகல நிலம் நீக்கி நில 3, பனை வடலிகளும், கிழக்கெல்லைக் காணிக்குள்ளிருக்கும் கிணற்றில் (1/3) மூன்றிலொரு பங்கும், அதற்குரிய தூர்வையுரித்தும், இதற்குள் இப்போ புதிதாகக் கட்டப்பட்ட கல்வீடும், இந்தப் பரப்பு மூன்றுக்கும் எல்லை கிழக்கு அம்பலவி இராமலிங்கத்திறுதனம், வடக்கு நாகலிங்கம் சந்திரசேகரத்துக்குரிய நாலுமுழ அகலங்கொண்ட நிலம், மேற்கு நாகலிங்கம் சந்திரசேகரத்திறுதனம் தெற்கு ஒழுங்கை இதடங்களிலும் கிழக்கெல்லைக் கருகால் வடக்கெல்லையிலிருந்து கிணற்றடிவரைக்கும் நாலுமுழ அகலங்கொண்ட பாதைப் பாவிப்புரித்தும் நாகலிங்கம் சந்திரசேகரத்துக்குப் புறநீங்கலாக மிகுதியடங்கலுமதைச் சேர்ந்தவைகளும்.

சி. ஆ. த. வடிவேலு ஜே. பி.,
நீதிமன்ற விற்பனை ஆணையாளரும்
விலைமதிப்பாளரும்.

''வடிவேல் உதயம்'',
காங்கேசன்துறை வீதி,
கோண்டாவில்,
22-9-78. 0682

## அறிவித்தல்

தீபாவளிப்பண்டிகையை முன்னிட்டு 30-10-78 திங்கட்கிழமை 'ஈழநாடு' அலுவலகத்துக்கு விடுமுறையாதலால் 31-10-78 செவ்வாய்க்கிழமை மட்டும் 'ஈழநாடு' வெளிவரமாட்டாது.

ஈழநாடு
The Eelanaadu

## தாமதம் நீங்குமா?

பிறப்பு, இறப்புப் பதிவு திருமணப்பதிவு ஆகியவை சம்பந்தமான நடைமுறைகளில் விரைவில் பெரும்மாற்றம் கொண்டுவரப்பட விருப்பதாகப் பதிவாளர் நாயகம் தெரிவித்திருக்கிறார். இந்த மாற்றம் நல்லமுறையில் அமையுமென எதிர்பார்ப்போம்.

திருமணப்பதிவோ பிறப்பு இறப்புப் பதிவோ முடிந்ததும் பதிவுப்பிரதியொன்று இலவசமாகக் கொடுக்கப்படும் என்று பதிவாளர்நாயகம் கூறியிருக்கிறார்.

பணம் கட்டினாலும் உரிய நேரத்தில் பதிவுப் பிரதி எடுக்கமுடியாதிருக்கும் இந்நாளில் பதிவு முடிந்ததும் இலவசப் பிரதியொன்று வழங்கப்படுமென அறிவித்திருப்பது தமிழ்ப் பழமொழிப்படி "பருத்தி புடவையாய்க் காய்த்த மாதிரி"த்தான்.

பரீட்சை எடுப்பதற்கும் அடையாள அட்டை பெறுவதற்கும் வேலைவாய்ப்புப் பெறுவதற்கும் பிறப்புச் சான்றுப்பத்திரம் அத்தியாவசியம்.

மாவட்டக் கச்சேரிகளிலுள்ள பதிவாளர் கந்தோர்களிலிருந்து பிறப்புப் பதிவுப் பிரதி பெறுவதற்கு மக்கள் படும்பாடு பெரும்பாடு.

மாதக்கணக்கில் காத்திருந்தாலும் பிறப்புப்பதிவுப் பிரதிபெறுவது பெரும் கஷ்டம். யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் யாழ்ப்பாணக் கச்சேரியிலுள்ள பிறப்புப் பதிவுக் கந்தோரில் ஆயிரக்கணக்கில் தேங்கிக் கிடந்த பிறப்புப் பதிவுப் பிரதிகோரிச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த விண்ணப்பங்களைச் சிரமதான இயக்கம் நடத்தி பைசல் செய்திருந்தார். ஆனாலும் இன்னமும் பிறப்புப்பதிவுப் பிரதிகள் பெறுவதில் கஷ்டம் நீங்கவில்லை.

பிறப்பு, இறப்பு, திருமணப்பதிவு நடைமுறைகளில் பெரும் மாற்றம்செய்ய விருப்பது வரவேற்கத் தக்கது. இதேசமயம் பிறப்பு, இறப்பு, திருமணப்பதிவுப் பிரதிகள் பெறுவதில் தாமதம் இல்லாமல் செய்வதற்கும் தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டியது அவசியமாகும்.

மணிவிளக்கு

உனது குற்றங்குறைகளை உணர். பிறரின் நல்லதையே பார் அவர்கள் நற்குணங்களையும் புகழ்
—ஸ்ரீசுவாமி சிவானந்த சரஸ்வதி

# "நெஞ்சில் கத்தியால் குத்தி உயிருடன்எரிக்கமுயன்றனர் கடலில் நீந்தித் தப்பினேன்"

## சன்சோனிக்கமிஷன் முன் சாட்சியம்

(திருகோணமலை)

"நான் தமிழன் அல்ல, சிங்களவன் எனக் கூறியும் சிங்களக் காடையர்கள் என் நெஞ்சில் கத்தியால் குத்தினர். மண்ணெண்ணை ஊற்றிக் காடையர்கள் என்னைக் கொளுத்த முயன்றபோது கடலில் பாய்ந்து நீந்தித் தப்பினேன்."

இவ்வாறு திருகோணமலையில் நடைபெற்றுவரும் சன்சோனிக் கமிஷன் விசாரணையில் திருகோணமலை ஆறுமகட்டையைச் சேர்ந்த பாக்கியநாதன் கிருஷ்ணகுமார் என்பவர் சாட்சியமளிக்கையில் கூறினார்.

### தாய் சிங்களப் பெண்

அவர் தமது சாட்சியத்தில் சொன்னதாவது:-

"எனது தந்தை தமிழர், தாய் சிங்களப் பெண்.

சம்பவதினத்தன்று சிந்தாமணிமுதலாளி என அழைக்கப்படும் விஜயசூரிய என்பவரது வீட்டுக்குமுன் 7, 8 சிங்களக் காடையர்கள் என்னைத் தாக்கினர். அவர்கள் தூஷணவார்த்தைகளால் ஏசினர்.

### நெஞ்சில் கத்திக்குத்து

திடீரென ஒருவர் என் நெஞ்சில் கத்தியால் குத்தினர். நான் தமிழனல்ல, சிங்களவன் எனக் கூறி என்னை விட்டுவிடும்படி கெஞ்சினேன். அதற்கு அவர்கள் பொய் சொல்லாதே எனக் கூறி மீண்டும் நெஞ்சில் கத்தியால் குத்தினர்.

அதன்பின் இரும்புக் கம்பியால் தாக்கி எனது சைக்கிளையும், கைக்கடிகாரத்தையும் அபகரித்துக்கொண்டனர். இதேவேளை அப்பகுதியிலுள்ள இந்து மயானத்தை நோக்கி ஓடினேன். அப்போது ஆறு பேர் என்னைத் துரத்திவந்து தாக்கினர். இதனால் நான் நிலத்தில் விழுந்தேன். அடுத்து ஒருவன் போத்தலில் இருந்த மண்ணெண்ணையை எடுத்து என்மீது ஊற்றினர்.

### எரிக்க முயற்சி

அவ்வேளை மயானத்தில் ஒரு கார் எரிந்துகொண்டிருந்தது. அந்தக் காரிலிருந்து நெருப்பை எடுத்து என்னைக் கொளுத்த முயன்றனர். உடனே நான் கடல் பக்கமாக ஓடினேன். அவர்கள் என்னைத் துரத்தி வந்தனர். நான் கடலில் பாய்ந்து நீந்திச் சென்றேன். சிறிது தூரம் நீந்தியபோது மீன்பிடிப் படகில் வந்த இருவர் என்னைக் கரைக்குக் கொண்டுவந்தனர். அங்கிருந்து பொலிஸ் ஜீப் மூலம் திருமலை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்லப்பட்டு அங்கு அனுமதிக்கப்பட்டேன். இதன் விளைவாக என்னால் வேலை செய்ய முடியாமல் உள்ளது. தற்போது தந்தையுடன் கொழும்பில் வசித்து வருகிறேன்" என்றார். (உ)

# புனித யூதாததேயூ ஆலய ஐப்பசித் திருநாள்

(யாழ்ப்பாணம் அரியாலை, புனித யூதாததேயூ ஆலய ஐப்பசித் திருநாள் இன்றும் நாளையும் சிறப்பாகக் கொண்டாடப்படுவதையொட்டி இக் கட்டுரை இங்கு வெளிவருகிறது)

புனித யூதாதேயூ ஆலயத்தில் இன்று இரவு 6 மணிக்கு வேஸ்பரும் கூட்டுத் திருப்பலிப் பூசையும் நாளை சனிக்கிழமை காலை 7 மணிக்கு திருநாட் கூட்டுத்திருப்பலிப் பூசையும், ஆசிர்வாதமும் அருட்திருவாஸ் அடிகளாரினால் ஆராதனைகள் ஒப்புக்கொடுக்கப்படும்.

இப்புனிதரின் திருத்தலம் இலங்கையில், முதலில் மட்டு நகர்பகுதியில் உள்ள தேத்தாதீவில் ஆரம்பிக்கப்பட்டது.

இவ்வாலயம் மாதாந்தம், முதல் வெள்ளிக்கிழமைகளிலும் சித்திரை கடைசி ஞாயிற்றுக் கிழமையும் அவரது தினங்களாக, அனுசரித்து பக்தர்களின் வேண்டுதலைக் கேட்டு அருள் பாலித்து பலருக்கு புதுமைகள் நிகழ்ந்ததின் மூலம் பக்தர்கள் தொகையாக யாழ்-குடாநாட்டில் பல்கிப்பெருகுவதைக் காணலாம்.

புனிதரின் சிந்தனைகளையும் பெருமைகளையும் பற்றி கூறுவதானால், திருச்சபையால் இப்



புனிதரை, "கைவிடப்பட்டவர்களின் பாதுகாவலர்" எனவும், யேசுகிறிஸ்துவின் பன்னிரண்டு அப்போஸ்தர்களில் ஒருவராகவும் அவரது நெருங்கிய உறவினராகம் உள்ளார்.

- செ. யோசேப் -

புனித யூதாததேயூ என்னும் பெயருக்கு அர்த்தம் அன்பு நிறைந்தவர், தயாளசிந்தனை நிறைந்தவர். என்பதாகும் இப்புனிதரின் தொண்டு; யூதேயா, சமேரியா, இதுமியா, சீரியா, மொசப்பத்தேமியா போன்ற தேசங்களில் காட்டுமிராண்டிகளாக சீவித்த அத்தேச மக்களை சீர்திருத்முள்ள மக்களாக சீவிக்கக் கற்பித்தார் என்று அவரது சீவியசரித்திரத்தில் கூறப்படுகிறது.

இப்புனிதரின் தினத்தை நினைவுகூரும் இந்நாளில் அவரது சிந்தனைகளையும் திருமறை உணர்வையும் ஏற்படுத்த புனிதரின் பெயரால் ஆரம்பிக்கப்பட்ட ஆலயத்தின் வளர்ச்சி கண்டு மென்மேலும் இறை பக்திபரவிட இறைவனைப் பிரார்த்திப்போம்.

## கமக்காரர் அடையாள அட்டை

(உடுப்பிட்டி)

புலோலி கமநல சேவை நிலையம் கமக்கார ஆள் அடையாள அட்டைகளை வழங்கி வருகின்றது. பயிர்ச்செய்கை உத்தியோகத்தர்கள் பிரிவு ரீதியாக இக்கமக்காரர் ஆள் அடையாளஅட்டைகள் வழங்கப்பட்டு வருகின்றன வென்றும் தாம் விவசாயம் செய்யும் காணிபற்றிய விபரங்களைத் தகுந்த சாதனங்களுடன் நிரூபிப்பவர்களுக்கே இவ்வட்டைகள் வழங்கப்படுமென்றும் கமநலச்சேவை வடமராட்சிப்பகுதி பெரும்பாக உத்தியோகத்தர் திரு. எஸ். இராஜகோபாலன் தெரிவித்தார். [உ]

## அடுத்த வாரம்

தவிர்க்க முடியாத காரணங்களால் இன்றைய இதழில் 'வெள்ளி விருந்து' இடம்பெறவில்லை. அடுத்தவாரம் வழமை போல் வெளிவரும்.

## நாளை திறப்புவிழா

(யாழ்ப்பாணம்)

ஜி. ஸி. ஈ. உயர்வகுப்பு மாணவர்களின் நலனை முன்னிட்டு யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியில் நாளை பிற்பகல்ஸ்ரான்லிசயன்ஸ்சென்றர் என்ற பெயரில் தனியார் கல்விநிறுவனம் ஒன்று திறக்கப்படவிருக்கிறது. யாழ். எம். பி. திரு.வெ. யோகேஸ்வரன் இதனை குத்துவிளக்கேற்றித்திறந்து வைப்பார். தொழிலதிபர் திரு. எஸ். ரி. தியாகராஜா உட்படப்பல பிரமுகர்கள் விழாவில் கலந்துகொண்டுஉரையாற்றுவர்.

(5-ம் கலத் தொடர்ச்சி)

யுடன் சேர்ந்த சுப்ரம்மண்யரா மூர்த்தம் கூடியது.

15. கொடிச்சேலை வெண்ணிறமாக இருப்பதன் பலன் என்ன?

16. உற்சவ காலங்களில் சுவாமியோடு வீதிவலம் வருவதால் பயன் என்ன?

17. முருகனுக்கு மிருக யாத்திரை (வேட்டைத் திருவிழா) எங்ஙனம் செய்யவேண்டும் என்று, குமாரதந்திரத்தில் சொல்லப்பட்டுள்ளது?

18. முருகனுக்குத் தீர்த்தோற்சவம் செய்தபின் நாம் அத்தீர்த்தத்தில் ஸ்நானம் செய்வதால் பயன் என்ன?

19. சகஸ்தர தாராபிஷேகம் [ஆயிரம் கண்கள்கொண்ட பாத்திரத்தினால் அபிஷேகம்] செய்வதன் பயன் என்ன?

20. மகா சங்காபிஷேகத்தில் [1000அல்லது100] முதன் முதலில் செய்யப்படும் உபபூஜைகள் பதினொன்று. அவைகள் யாவை? வரிசைக் கிரமமாக எழுதுக.

## சைவசமய கிரியா விளக்க அறிவுப் போட்டி

யாழ் கடைச்சாமி வீதி ஸ்ரீ நடேசர் ஆலயத்திருப்பணிக்காகவும், சைவமக்கள் சமயகிரியா விளக்க அறிவைப் பெருக்கவும் இந்த அறிவுப் போட்டி நடத்தப்படுகிறது.

### நிபந்தனைகள்

1. இப்போட்டியில் சிவானந்த குருகுல மாணவர்கள் தவிர எவரும் பங்கு பற்றலாம்.

2. கீழே தரப்படும் வினாக்களுக்கு விடைகள் பிரமாணங்களுடன் தனிக்காகிதத்தில் எழுதப்பட்டு, பிரம்மஸ்ரீ ப. சுபரம்மண்ய ஐயர், 101, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு ரூபா 1/- கட்டணமாக தபாற் கட்டளை (போஸ்றல்ஓடர்) உடன் 30-12-78க்குமுன் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்படவேண்டும். கட்டணம் செலுத்தாத விடைகள் போட்டிக் குழுவினால் நிராகரிக்கப்படும்.

3 இவ்வினாக்களுக்குரிய விடைகள் பிரமாணங்களுடன் எழுதி, போட்டிக்குழுவினரால் அரக்கு முத்திரையிடப்பட்டு ஸ்ரீநடேசர் ஆலயத்தில் வைக்கப்பட்டுள்ளது. இவ்விடைகளுக்கு ஒத்த விடைகளே சரியென ஏற்றுக்கொள்ளப்படும்.

4- பரிசுகள் விபரம்:

முதற் பரிசு ரூபா 101/-
இரண்டாம் பரிசு ரூபா 75/-
மூன்றும் பரிசு ரூபா 51/-
மேலும் 5 பரிசுகள் தலா ரூபா 10/-வீதம் வழங்கப்படும்.

5. இப்போட்டிக் குழுவின் தீர்ப்பே இறுதியானது.

6 சித்தியடைந்தவர்களுக்குப் பரிசில்கள் காலயுத்தி வருடம் மார்கழித் திருவாதிரை அன்று பிற்பகல் விசேட கூட்டத்தில் போட்டிக் குழுத்தலைவர் நியாய சிரோமணி பிரம்மஸ்ரீ சி. சுப்ரம்மண்ய சாஸ்திரிகள் அவர்களால், நடேசர் ஆலய மண்டபத்தில் வழங்கப்படும்.

தேவஸ்தானம்
ஸ்ரீநடேசர் ஆலயம்

### வினாக்கள்

1. பஞ்சகவ்யத்தில் பால் சேர்ப்பதால் பலன் என்ன?

2. பஞ்சகவ்யத்தில் கோஜலம் சேர்ப்பதால் பலன்என்ன?

3. பஞ்சாமிருதம் இருவகைப்படும். அவை யாவை?

4. பஞ்சாமிருதத்தில் சேர்க்கப்படும் ஐந்து பழங்கள் யாவை?

5. பழ பஞ்சாமிருத அபிஷேகத்தினால் பலன் என்ன?

6. பஞ்சாமிருதத்தில் தேன் சேர்ப்பதால் பலன் என்ன?

7. ஓராண்டு முதல் பன்னிரண்டு ஆண்டுகளுக்குள் இடத்தைத் திருத்தி 'ஆண்டவனே உம்மை திரும்பவும் உள்ள இடத்தில் ஸ்தாபிப்பேன்' என்ற இந்தப் பிரார்த்தனை எந்தச் சந்தர்ப்பத்தில் கூறப்படுகிறது? இதன் விபரம் எந்த ஆகமத்தில் கூறப்பட்டுள்ளது?

8. சக்திக்கு இடது அல்லது வலது கையில் காப்புக் கட்டப்படவேண்டும். இது எங்கே சொல்லப்பட்டிருக்கிறது?

9 தேருக்கும், இடபத்துக்கும், சூலத்துக்கும் எங்கெங்கே காப்புக்கட்ட வேண்டும்?

10. கும்பாபிஷேகம் நடந்த நாற்பத்தைந்தாம் நாள் சிவனுக்கு ரட்ஷாபந்தன விசர்ஜனம் (காப்பு அவிழ்த்தல்) செய்யப்படவேண்டும். இது எங்கே சொல்லப்பட்டுள்ளது?

11. ஆண்டவனுக்கு ரட்ஷாபந்தனம் (காப்புக் கட்டுவது) செய்வது எதற்காக?

12. வேலுடன் வள்ளி, தெய்வானை ஆகிய இருவரும் இடதுபுறம் வருவது சரியா?

13. சக்திவேல் ஆறு மதங்களை உள்ளடக்கிய சைவ சமயத்தின் சின்னமாகும். எங்ஙனம்?

14. சக்தி அஸ்திரமா அல்லது வள்ளி, தெய்வானை

(4-ம் கலம் பார்க்க)

## எகிப்திய அதிபரை

# பதவிநீக்க சதிமுயற்சி: 16 கம்யூனிஸ்டுகள் கைது

கெய்ரோ, அக். 26

எகிப்தியஅதிபர் அன்வர் சதாத்தைப் பதவியிலிருந்து வீழ்த்த எடுக்கப்பட்ட சதிமுயற்சிமுறியடிக்கப்பட்டுள்ளது.

அதிபர் சதாத்தைப் பதவிலிலிருந்து அகற்றி அதிகாரத்தைக் கைப்பற்ற கம்யூனிஸ்டுகள் சதித்திட்டம் மேற்கொண்டதாகவும் இத்திட்டம் முறியடிக்கப்பட்டு 16 பேர் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்பட்டதாகவும் 'அல்-அக்ரம்' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

சதித்திட்டம் மேற்கொள்ளப்பட்டவிதம் பற்றிய ஏனைய விபரங்கள் வெளியிடப்படவில்லை. (உ)

---

வாஜ்பாய் சீனவிஜயம்

## ஜெகஜீவன்ராம் கருத்து

புதுடில்லி, அக். 26

வெளிநாட்டமைச்சர் திரு. வாஜ்பாயின் சீன விஜயம் அண்டை நாடுகளுடனன பாரத நல்லுறவின் ஒரு பகுதியே என்று பாரதபாதுகாப்பு அமைச்சர் திரு. ஜெகஜீவன்ராம் தெரிவித்துள்ளார். சீனு, பாகிஸ்தான் உட்பட ஏனைய அண்டைநாடுகளுடனும் பாரதம் நல்லுறவை வளர்த்துக் கொள்ளத் தயாராக இருக்கின்றது என்றும் அவர் சொன்னர்.

பிரிட்டனிடமிருந்துபாரதம் போர்விமானங்கள் வாங்குவது தற்சார்புத் தேவையைப் பூர்த்திசெய்வதாகவே அமையும் என்றும் அவர் குறிப்பிட்டார். (உ)

---

சிக்மகளூர் விவகாரம்:

## கேரள ஆளுநர் அவசரமாக நாடு திரும்பினர்

புதுடில்லி, அக். 26

சிக்மகளூர் தொகுதியில் ஜனதாவேட்பாளரை ஆதரிப்பது தொடர்பாக உத்தியோக பூர்வ காங்கிரஸ் கட்சிக்குள் ஏற்பட்டுள்ள கருத்துவேறுபாட்டினையடுத்து சென்னையில் தமது அலுவல்களை ரத்துச் செய்துவிட்டு கேரள ஆளுநர் திருமதி ஜோதிவெங்கடாசலம் திருவனந்தபுரம் திரும்பியுள்ளார்.

ஜனதாகட்சி வேட்பாளரை எதிர்ப்பது என்று உத்தியோக பூர்வ காங்கிரஸ் தீர்மானித்தது குறித்து கேரள முதல் மந்திரி திரு. கே. ஏ. அந்தனி கடுமையான கண்டனம் தெரிவித்துள்ளார்.

இந்தப்பிரச்னையில் தம் பதவியை ராஜினமாச் செய்யப் போவதாகவும் அவர் அறிவித்துள்ளார்.

காங்கிரஸ் பாராளுமன்றக் குழுவின் இம்முடிவுகட்சிக்குள் பெரும்பிளவு ஏற்படவழிவகுக்கலாமென அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

மேற்படி இடைத்தேர்தல் அடுத்தமாதம் ௦ம் திகதி நடைபெறவிருப்பது தெரிந்ததே. (உ)

---

## இன்றைய இராசிப்பலன்

ஐப்பசி மாதம் 10-ந் திகதி

வெள்ளிக்கிழமை

(27-10-78)

**மேஷம்:-** நீண்டநாள் கனவு இன்று நனவாகும் பெரியவர்கள் உதவிக்கு வருவர். புண்ணிய விருப்பு மேலிடும்,

**இடபம்:** உத்தியோக உயர்வுக்கும் உரிமைகளைப் பெறுவதற்கும் உகந்தநாள். சிலருக்கு இடமாற்றத்திற்கும் இடமுண்டு செலவினங்கள் கைக்கடங்கியதாகவிருக்கும்.

**மிதுனம்:-** உழைப்பினுல் முன்னேற்றம் உண்டு. தாய் வழிப் பொருள் வரவிற்கும் இடமுண்டு. பெரியோர் ஆதரவும் உண்டு.

**கடகம்:-** வணிகர்கள் இன்று அதிக முதலீட்டைத் தவிர்த்துக்கொள்ளவும். வீணை சிந்தனைக் கிடமளியாது உடல் நலத்தைப் பேணிக்கொள்ளவும். வைத்தியச் செலவுக்கும் இடமுண்டு.

**சிங்கம்:-** அன்னிய வாசம் அமைதிக்கு உலைவைக்கும். அபாயகரமான காரியங்களில் ஈடுபடுபவர்கள் அவதானத்துடன் நடந்துகொள்ளவும். தெய்வநம்பிக்கை நன்று.

**கன்னி:** ஒளிமயமான சூழ்நிலை உருவாகும். வீட்டில் உள்ளவர்களின் அன்பும் ஆதரவும் தாராளமாகக்கிடைக்கும். இருமனம் கலந்தவர்கள் மத்தியில் இனிமையான சம்பவம் இடம்பெறும்.

**துலாம்:** செலவினங்கள் அளவுக்கு மிஞ்சியதாகவிருக்கும். தொழில்புரியும் இடத்தில் புதிய எதிர்ப்பைச் சமாளிக்கவேண்டிய நிலைமை ஏற்படும்.

**விருச்சிகம்:-** இலாபகரமான தொழிலில் முதலீடு செய்வீர்கள். தாய்வழி மூலம் தனவரவிற்கிடமுண்டு. நல்ல நாள்.

**தனுசு:-** புத்திக் கூர்மையுடன் புதிய எண்ணங்களும் தலைதூக்கும் புத்திரர்களால் புகழும் கிடைக்கும். இறை நம்பிக்கையால் இல்லத்தில் அமைதிதவழும்.

**மகரம்:-** கழுகுப்பார்வை உங்களைவட்டமிடும். எக்காரியத்திலும் கவனம் செலுத்தவும் உதவிசெய்யப்போய் குறைகேட்கநேரிடும்.

**கும்பம்:-** களஸ்திரவழியால் மகிழ்ச்சிக்கிடமுண்டு உள்ளத்தில் உவகை துள்ளும். சமயோசிதபுத்தி உங்களுக்கு தாராளமான சித்திகளைத் தேடித்தரும்.

**மீனம்:-** எதிர்பார்த்தகாரியத்தில் தடைகள் ஏற்படும். அவசரமுடிவு ஆபத்தில் சிக்கவைக்கும். குடும்பத்திலும் பதட்டநிலைதென்படும். எதையும் தாங்கும் இதயம்வேண்டும்.

சோதிடக்கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

---

## சித்தன்கேணியில் பொருட்காட்சி

(சித்தன்கேணி)

வட்டுக்கோட்டைத்தொகுதி சித்தன்கேணி அரசினர் தையல் பயிற்சி நிலையத்தின் பொருட்காட்சி நாளை காலை வட்டுக்கோட்டை இந்துக்கல் லூரியில் நடைபெறுகிறது.

சங்கானை உதவி அரசாங்க அதிபர் திரு. எம். சிவசுப்பிரமணியம் தலைமையில் நடைபெறும். இவ் வைபவத்தில் யாழ். மேலதிக அரசாங்க அதிபர் திரு. என். பி.ஜெயநாதன் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு விழாவினைத் தொடக்கி வைப்பார்.

வட்டுக்கோட்டைத் தொகுதி எம். பி. திரு. தா. திருநாவுக்கரசு மங்கள விளக்கேற்றி வைப்பார். (இ)

---

## "சட்டத்தின் முன் அந்தஸ்துக்கு இடமில்லை"

(யாழ்ப்பாணம்)

"கடந்த கால சம்பவங்களை மறந்து சட்டத்திற்கு மதிப்பளித்து பொதுமக்கள் பொலிசாருடன் ஒத்துழைக்கவேண்டும்."

இவ்வாறு உரும்பராயில் நடைபெற்ற குற்றத்தடுப்புப் பற்றிய கருத்தரங்கில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு பேசுகையில் சுன்னகம் பொலிஸ் நிலையப்பொறுப்பதிகாரி திரு பொன்னுத்துரை சுகுணேந்திரன் கேட்டுக்கொண்டார்.

திரு. சுகுணேந்திரன் தொடர்ந்து பேசுகையில், "பொலிஸ் நிலையத்தில் எந்தப் பாகுபாடுமின்றி விசாரணைகள் நடைபெறும். சட்டத்தின் முன் அதிகாரியானுலும், பாமரனுனுலும் சமமே.

அந்தஸ்து காட்டி பொலிஸ் நிலையத்தில் யாரும் காரியம் சாதித்துவிட முடியாது" என்றுர்.

"சாதி வேறுபாடு காட்டுவது மனிதாபிமான செயலல்ல. இதுவிடயத்தில் சட்டம் தனது பணியை வலுப்படுத்தும்" என்றும் அவர் கூறினர்

திரு. ந. சர்வேஸ்வரமூர்த்தி, வைத்திய கலாநிதி க. சிவஞானரத்தினம், முன்னுள் உரும்பராய் பட்டணசபைத் தலைவர் திரு. செல்லத்துரை, உரும்பராய் தமிழர் விடுதலைக் கூட்டணிக் கிளையின் தலைவர் பி. ஜெயராஜா, உரும்பராய் கிராமசேவகர் திரு. கிருஷ்ணராஜா ஆகியோரும் பேசினர். (உ)

---

## அரச பாடசாலையாக்க முயற்சிப்பாராம்

(உருத்திரபுரம்)

கிளிநொச்சித் தொகுதியிலுள்ள தனியார் கல்வி நிலையமொன்றைவிரைவில்அரசாங்க பாடசாலையாக்குவதற்குத் தாம் முயற்சிக்கப்போவதாகக் கிளிநொச்சி எம். பி. திரு. வி. ஆனந்தசங்கரி உறுதியளித்தார். இத்தனியார் நிறுவனம் திருநகரிலுள்ளது. இந்நிறுவனத்தில் நடைபெற்றகலைவிழாவில் பேசுகையிலேயே எம்.பி. திரு. ஆனந்தசங்கரி மேற்கண்ட உறுதியை அளித்தார்.

மணிமொழியார் திரு. சி. இராசரத்தினம் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் திரு. ஆனந்தசங்கரி பேசுகையில், கிளிநொச்சியில் திருநகர் கிராமம் அரை ஏக்கர் திட்டமாகையால் இங்கேயே கூடுதலான மக்கள் வாழ்கின்றுர்கள் என்றும் இக்கிராமத்தின் ஒரு மைல் சுற்றுலுக்கப்பால்தான் வேறு பாடசாலைகள் இருக்கின்றனவென்றும் திருநகரில் வாழ்கின்ற பிள்ளைகளின் வசதிக்காக இங்கு திறமையாக இயங்கிவரும் இத்தனியார் நிறுவனத்தைத் தாம் விரைவில் அரசாங்க பாடசாலையாக்குவதற்கு முயற்சி எடுப்பதாகவும் அத்துடன் திருநகர் பிரதான வீதியால் உருத்திரபுரத்திற்கு விசேஷ பஸ் சேவையையும் ஒழுங்குசெய்வதாகவும், இதனுல் சந்தைக்குச் செல்கின்ற விவசாயிகள், மாணவர்கள் மற்றும் ஏனையோர் பயனடைவார்கள் என்றும் கூறினுர். இப்பிரதான வீதிக்கு மின்சார வசதியும்அண்மையில்கிடைக்கவுள்ளதென்றும்தெரிவித்தார்.

திரு. இ. கிருஷ்ணராஜா பேசுகையில் இக்கல்விநிலையம் கிளிநொச்சியில் திறம்படச் சேவையாற்றி வருகிறதென்றும் இச்சுற்றுடலைச் சேர்ந்த திருநகர் கிராமத்துக்குத் தேவையான சேவைகளை எம். பி.விரைவில் செய்துதரவுள்ளதாகவும், அதற்கு திருநகர் மக்கள் சகலஒத்துழைப்பும் நல்கவேண்டுமென்றும் கூறினுர்.

இவ்விழாவில் குருகுல நிர்வாகி திரு. சி. கதிரவேலு, புலவர் செல்வி சி. விசாலாட்சி, நிலையமாணவிகள் ஆகியோர் பேசினர்.

விழாவில் விசேடநிகழ்ச்சியாக திரு. பெ. சாந்தன் தலைமையில் நடைபெற்றகவியரங்கில் நிலைய பழையமாணவர்கள் பங்கு பற்றினர். நிலைய மாணவிகள் கிளிநொச்சி குருகுலமாணவர்கள் ஆகியோரினது கலைநிகழ்ச்சியும் செல்வன் துரைராஜாவின் இசையும் கதையும் இடம்பெற்றன. [அ]

---

உள்ளூராட்சித் தேர்தல்களில்

## சிறுபான்மைத் தமிழர் மகாசபை தனித்துப் போட்டியிடும்

(யாழ்ப்பாணம்)

வடபகுதியில் உள்ள சகல உள்ளூராட்சிமன்றத் தேர்தல்களிலும் அகில இலங்கைச் சிறுபான்மைத் தமிழர் மகாசபை தனித்துப் போட்டியிடுவது என்று தீர்மானித்துள்ளது.

மகாசபையினர் சபையின் உபதலைவர் திரு. எஸ். வி. போல் தலைமையில்கூடி இம்முடிவை எடுத்தனர்.

நிறைவேற்றப்பட்ட மற்றும் தீர்மானங்கள் வருமாறு;

"அண்மையில் நடைபெற்ற சரஸ்வதி பூஜையில் அச்சுவேலி வசாவிளான் பகுதிகளிக்உள்ள இரு பாடசாலைகளில் இடம்பெற்ற சாதிப்புறக்கணிப்பு நிகழ்ச்சிகளையிட்டுக் கல்வி அமைச்சருடன் தொடர்புகொண்டு அப்பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்களுக்கு எதிரான நடவடிக்கை எடுப்பது.

"பாடசாலைகளில் நிலவும் சாதிப்பாகுபாட்டு நடவடிக்கைகள் பற்றி வடபகுதி வித்தியாதிபதியுடன் நேரில் பேச்சுக்கள் நடத்த ஒருகுழு அமைப்பது.

"ஆலயப் பிரவேசம் தொடர்பாக அண்மையில் அளிக்கப்பட்ட நீதிமன்றத் தீர்ப்புப்பற்றி சட்ட அறிஞர்களோடு கலந்து ஆராய்வது.

"சிறுபான்மைத் தமிழர் மத்தியில் இயங்கும் இயக்கங்களை ஒன்றிணைத்து ஒரு ஐக்கிய முன்னணியை உருவாக்க முயற்சிகளை மேற்கொண்ட திருவள்ளுவர் மகாசபைக்கு நன்றி தெரிவிப்பதுடன்மேலும் ஐக்கியத்தை ஏற்படுத்த மகாசபையின் பூரண ஒத்துழைப்பினை நல்குவது"

இதுவிஷயமாக நாலுபேரைக் கொண்ட குழுஒன்று செயல்படும்வகையில் அமைக்கப்பட்டுள்ளது.

தமிழர் விடுதலைக் கூட்டணியினர் சமூகக் குறைபாடுகளை ஒழிப்பதாகக்கூறித் தமது அரசியல் செல்வாக்கை சிறுபான்மைத் தமிழர் மத்தியில் திணித்துக்கொள்ள முயற்சிசெய்கின்றனரே ஒழிய தூய்மையான மனத்தோடு சமூகக் குறைபாடு ஒழிப்பு நடவடிக்கைகளில் செயற்படவில்லை என்ற கண்டனத்தீர்மானமும் நிறைவேற்றப்பட்டுள்ளது. [ஊ-அ]

---

## "சி. பா. தமிழரிடையே ஒற்றுமை மலர வேண்டும்"

(யாழ்ப்பாணம்)

"சிறுபான்மைத் தமிழ் மக்களிடையே இன்று இயங்கும் சகல இயக்கங்களையும் உள்ளடக்கிய சிறுபான்மைத் தமிழர் ஐக்கிய முன்னணியொன்றை அமைக்கும் முயற்சியில் அகில இலங்கைத் திருவள்ளுவர் மகா சபை தொடர்ந்தும் ஈடுபடும். இந்நாட்டில் வாழும் தமிழ்ப்பேசும் மக்கள் தமது இனத்தையும் மொழியையும் பேணிக்காக்க தமிழ் ஈழம் வேண்டும் என்று கிளர்ச்சி செய்யும் இக்காலத்தில் இப்பகுதிகளில் பன்நெடுங்காலமாக உரிமையற்றவர்களாக அடிமை நிலையில்வாழும் நாம் ஏன் எமக்குள் இருக்கும் வேறுபாடுகளைக் களைந்து ஒன்றிணையக்கூடாது நாம் இன்று அனுபவிக்கும் சல உரிமைகளும் நமது போராட்டத்தின் மூலம் வென்றெடுத்தவையே ஆகும்"

இவ்வாறு காரைநகர் வலந்தலையில் நடைபெற்ற அகில இலங்கைத் திருவள்ளுவர் மகாசபையின் நிர்வாகசபைக் கூட்டத்திற்குத்தலைமைவகித்த மகாசபை உபதலைவர் திரு. எஸ். அரியநாயகம் தமது தலைமையுரையில் குறிப்பிட்டார். (அரியாலை-உ)

---

திருத்தணி ஆலயம்

## விசாரணைக் கமிஷன் நியமனம்

சென்னை, அக். 26

திருத்தணி ஸ்ரீசுப்பிரமணியா ஆலயத்தில் உள்ள வைரக்கற்கள் பதித்த ஆபரணங்கள், மற்றும் தங்கநகைகளில் தில்லுமுல்லு நடைபெற்றுள்ளதாகக் கூறப்படும் புகார் பற்றி விசாரணை செய்ய தமிழ்நாடு அரசு விசாரணைக்கமிஷன் ஒன்றினை நியமித்துள்ளது. திரு. ஆர். நடராஜனை தமிழ்நாடு அரசு இக்கமிஷனின் தலைவராக நியமித்துள்ளது.

விசாரணை அறிக்கை எப்போது அரசிடம் சமர்ப்பிக்கப்படுமென்று தெரிவிக்கப்படவில்லை. (உ)

---

## 1100 அரசியல் கைதிகள் விடுதலை

லண்டன், அக். 26

ஈரானிய அதிகாரிகள் 1100க்கும் மேற்பட்ட அரசியல் கைதிகளை விடுதலை செய்துள்ளனர்.

இதில் ஒரு கைதி 30வருடகாலம் சிறையில் இருந்தவர்.

ஈரானிய மன்னர் ஷாவின் 59வது பிறந்த தினத்தையொட்டி இவ்விடுதலைவழங்கப்பட்டுள்ளது.

**வெலிங்டன்** (யாழ். நகர்)
தினசரி 5 காட்சிகள்
சனி, ஞாயிறு 4 காட்சிகள்
நிலவே நீ சாட்சி
(புதியபிரதி)

**லிடோ** போன்: 7626 தினசரி 4 காட்சிகள்
(யாழ்.நகர்) எங்கள் தங்கராஜா

# "சிங்களப்பட உலகவளர்ச்சி; முன்னேடியாக தமிழரே திகழ்ந்தனர்"

## தயாரிப்பாளர் நாணயக்கார பேட்டி

(வெள்ளவத்தை)

"சிங்களத் திரைப்படத் துறையின் வளர்ச்சிக்கு முன்னேடியாக விளங்கியவர்கள் தமிழர்கள் சிங்களத்திரையுலகம் அடைந்துள்ள வெற்றிக்கு அவர்களின் பங்களிப்பு மிக முக்கியமானது அதனுல்தான் சிங்களவனுன நான் சகோதர தமிழ்ப்பட வளர்ச்சிக்கு எனது சிறிய பங்களிப்பாக 'அநுராகத்தை' தயாரித்துள்ளேன்."

இவ்வாறு சிங்களத்திரைப் படவுலகின் முன்னணி டைரக்டரும், 'அநுராகம்' திரைப்படத்தின் தயாரிப்பாளரும், டைரக்டருமான திரு. யஸபாலித்தநாணயக்கார 'ஈழநாடு' பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் தெரிவித்தார்.

துடிப்புள்ள இளைஞரான யஸபாலித்தநாணயக்கார பத்துத் திரைப்படங்கள் டைரக்ட் செய்துள்ளார். புரட்சிகரமான எண்ணங்களைக்கொண்டு இடதுசாரி அரசியல்வாதியான திரு. வாசுதேவநாணயக்காராவின் சகோதரராவார்.

மேலும் திரு. யஸபாலித்த கருத்துத் தெரிவிக்கையில் கூறியதாவது:-

"இலங்கைத் தமிழ்ப்பட வெற்றிக்கு யாழ்ப்பாணம் ஒரு தளமாக விளங்குகிறது. அதனுல் எனது திரைப்படமான அநுராகத்தின் வெளியீட்டு விழாவை யாழ்ப்பாணத்திரையரங்கிலேயே நடிகர்கள் கலந்துகொள்ளும் காட்சியை ஒழுங்கு செய்யவிருக்கிறேன்.

'அநுராக'த்தின் முதற் சிறப்புக்காட்சி முதன் முறையாக யாழ்ப்பாணத்தில் நடத்துவதில் நான் பெருமைப் படுகிறேன். எனது வாழ்க்கையில் ஏற்பட்ட மறக்கமுடியாத சம்பவம் ஒன்றை குறிப்பிட வேண்டும். தமிழ்ப்பட ரசிகர்களுக்கு நன்கு அறிமுகமான கோமாளிகள், ஏமாளிகள் திரைப்பட கமிரா கலைஞர் யோன் யோகராஜாதான் எனது காமிராவை இயக்குபவரும்கூட. ஆகஸ்ட் கலவரத்தின்பொழுது மாத்தறையில் எனது 'மொனரதென்ன' என்ற சிங்களத் திரைப்படத்தின் படப்பிடிப்பு நடைபெற்றுக்கொண்டிருந்தது.

எனது ஒளிப்பதிவாளர் ஒரு தமிழர் என்றறிந்து பலர் அவரைத் தாக்க ஒரு கோஷ்டியாக திரண்டுவந்தார்கள். அவர்களிடம் நான் சொன்னேன்; எனது கமிராமேனை தாக்குவதற்கு முன், என்னை தாக்குங்கள். எனது பிணத்தின் மீது நடந்துசென்றுதான் அவரைத் தாக்கமுடியும் என்று அவர்களுக்கு எச்சரிக்கை விடுத்தேன்.

இரவுபகலாக நான் உட்பட நடிகர் விஜயகுமாரதுங்க மாலினி பொன்சேகா அவருக்குத் தக்க பாதுகாப்பளித்ததுடன் படப்பிடிப்பை முடித்துக்கொண்டுதான் கொழும்பு திரும்பினேன்.

சிங்கள திரையுலகத்தையும் சிங்கள நடிகர்களையும் நேசிப்பது போல தமிழ்க்கலைஞர்

(6-ம் பக்கம் பார்க்க)

இன்று மட்டும்
**ஸ்ரீதர்** தினசரி 10-15, 2-15, 6-15 & 9-45
(யாழ்ப்பாணம்)
எம். ஜி. ஆர். --- சரோஜாதேவி
நடித்த
திருடாதே
[புதிய பிரதி]

**சாந்தி** தீபாவளித் திரைவிருந்து!
போன்: 7642.
(யாழ்ப்பாணம்) தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
ஏ. வி. எம். ராஜன், நிர்மலா, சந்திரபாபு, மனோரமா
அ வ ள் புதிய பிரதி வண்ணப்படம்

**Rio** (Jaffna)
Phone: 7607
Daily 4 Shows
ADRIFT
(Adults Only)

REGAL
(Jaffna)
NOW SHOWING
Daily at, 4-30, 7-00&9-30 p.m,
SYDNEY JAMES in
THE BIG JOB [Colour]

**நாகம்ஸ்**
(சுன்னகம்)
தினசரி 6-45, 10-00
சனி, ஞாயிறு 2-45
சிவாஜி - மஞ்சுளா
எங்கள் தங்கராஜா

# "நாடகமேடை" நாட்டின் கலாச்சாரத்தைபிரதிபலிக்கும்

[வெள்ளவத்தை]

"நாட்டின் முன்னேற்றத்திற்குப் பெரும்பங்கு கொண்டுழைப்பவர்கள் நாடகக்கலைஞர்கள் நாடக மேடையின் முன்னேற்றத்திற்காக அரசு போதிய ஒத்துழைப்பு நல்க வேண்டும். நாடகமே நாட்டின் கலாசார பண்பாட்டை பிதிரபலிக்க கூடியது."

இவ்வாறு இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் பொதுச் செயலாளர் திரு. எம். எஸ். செல்லசாமி பொரளை வை. எம். பீ. ஏ. மண்டபத்தில் நடைபெற்ற 'ஒருமலர்' நாடக அரங்கேற்றத்திற்கு தலைமை வகித்து பேசும் பொழுது குறிப்பிட்டார்.

ஒருமலர் நாடகத்திற்கு பிரமல தொழிலதிபர் திரு. ஜி. நாராயணசாமி திரைப்பட நடிகர் டீன்குமார் திரு. வி. கே. டி. பாலன் ஆகியோர் பிரதம அதிதிகளாக கலந்து கொண்டனர்.

**வெஸ்லி**
(மானிப்பாய்)
தினசரி 6-30, 9-30
முத்துராமன்-ஜெய்சித்திரா
இன்ஸ்பெக்டர்மனைவி

175வது தின வெள்ளி விழாவை நோக்கி
வீறுநடை போடுகிறன்.
தினசரி 4 காட்சிகள்
**ராணி** சிவாஜி-மஞ்சுளா
(யாழ். நகர்) நடித்த
உ த் த ம ன் (சினிமாஸ்கோப்)

**மனோகரா** தினசரி 4 காட்சிகள்
(யாழ்ப்பாணம்) எம். ஜி. ஆர்., அஞ்சலிதேவி
நடித்த
மர்மயோகி (புத்தம்புதிய பிரதி)

**ராஜா** தினசரி: 10-30, 2-30, 6-30, 9-45
(யாழ். நகர்)
ஃ மரிக்கார் ராமதாஸ்
ஃ ஹெலன்குமாரி
செல்வசேகரன்-சிவராம் - ஜவாகர்-ராஜகோபால்
மற்றும்பலர் நடித்த சிறந்த ஹாஸ்ய திரைவிருந்து!
ஏமாளிகள்

இன்று மாபெரும் ஆரம்பவிழா
**வின்ஸர்** படமாளிகையில்
(தினசரி 4 காட்சிகள்)
சமத்கார பிலிம்ஸ்
அநுராகம்
யாழ். நகர் பாரத் எம்.ஜி.ஆர். ரசிகர் மன்ற ஆதரவில் நடைபெறுகிறது.



சகல கலைஞர்களும் இன்று 6-30 மணி காட்சிக்கு நேரில் தோன்றுவார்கள்.
நடிகர்கள்;
எம்.என். சிவராம்
சந்திரகலா
எஸ் என் தனரத்தினம்
எஸ் விஸ்வநாதராஜா
அனேஜா
மாஸ்டர் ஹஷி
வசனம், உதவி டைரக்ஷன்:
பி.எஸ்.நாகலிங்கம்
ஒலிப்பதிவு:
ஜோன் யோகராஜா
படத் தொகுப்பு:
துரை பவானந்தன்
இசை:
சரத் தஸநாயக
தயாரிப்பு-டைரக்ஷன்:
யசபாலித்த நாணயக்கார

தீபாவளி வெளியீடு!
**வின்ஸர்** இன்று முதல்
தினசரி 4 காட்சிகள்
(யாழ்ப்பாணம்)
∴ சிவராம் ∴ சந்திரகலா
தனரத்தினம் - அனேஜா
செல்வம் பெர்னுண்டோ
டொன் பொஸ்கோ
மாஸ்டர் ஹஷி
ஆகியோர் நடித்த
சமத்கார பிலிம்ஸ்
அநுராகம்

# "கிழக்கிற்கு பல்கலைக்கழக வளாகம்" மட்டுநகர் வரவேற்பில் பிரதமர் உறுதி

## "பிரேமா விஜயம் வரப்பிரசாதம்" கல்குடா உபசாரத்தில் இராசதுரை எம். பி.

(மட்டக்களப்பு)

"கிழக்குப் பிராந்தியத்திற்கு ஒரு பல்கலைக்கழகவளாகத்தை நிறுவ அரசாங்கம் நடவடிக்கை எடுத்துவருகிறது".

இவ்வாறு பிரதம மந்திரி திரு. ஆர். பிரேமதாசா மட்டக்களப்பில் நேற்றுதமக்களிக்கப்பட்ட வரவேற்புக்கூட்டத்தில் பேசுகையில் தெரிவித்தார்.

பிரதமருக்கு கல்குடா-ஒட்டமாவடி மகாவித்தியாலயத்தில் அளிக்கப்பட்ட வரவேற்புபசாரத்தில் மட்டக்களப்புமுதல் எம். பி. திரு. செ. இராஜதுரையும் கலந்துகொண்டார்.

"பிரதமர் கிழக்குப்பிராந்தியத்திற்கு விஜயம் செய்திருப்பது கிழக்கிற்குக் கிடைத்த வரப்பிரசாதமாகும்" என்று திரு. இராஜதுரை உரையாற்றுகையில் கூறினார்.

பிரதமர் இங்கு பேசுகையில் "மக்கள் சமஉரிமையுடன் இன, மதவேறுபாடின்றி வாழ அரசு பணியாற்றும்" என்று சொன்னார். [உ]

## சுவீப் முடிவுகள்

(கொழும்பு)

686-வது தேசிய லொத்தர் சீட்டிழுப்பின் உத்தியோக பூர்வ முடிவுகள் பின்வருமாறு:

முதலாம் பரிசு

02 X 0495

ரூபா 100,000

இரண்டாம் பரிசு

08 S 0805

ரூபா 40,000

மூன்றும் பரிசு

12 B 0189

ரூபா 10,000

தலா ரூபா 1,522 சதம் 50 கொண்ட 100 ஆறுதல் பரிசுகள் வருமாறு:

| | |
|---|---|
| 12 A 0371 | 16 A 0066 |
| 28 A 0366 | 01 B 0954 |
| 07 B 0181 | 14 B 0317 |
| 22 B 0452 | 23 B 0684 |
| 25 B 0649 | 27 B 0145 |
| 28 B 0345 | 30 B 0306 |
| 03 C 0902 | 05 C 0081 |
| 11 C 0606 | 33 C 0064 |
| 33 C 0749 | 01 D 0401 |
| 04 D 0538 | 09 E 0886 |
| 12 E 0797 | 17 E 0860 |
| 18 E 0650 | 32 E 0291 |
| 09 F 0112 | 18 F 0252 |
| 25 F 0109 | 25 F 0741 |
| 03 G 0350 | 06 G 0819 |
| 19 G 0952 | 02 H 0001 |
| 05 H 0904 | 24 H 0946 |
| 29 H 0799 | 33 H 0396 |
| 17 J 0026 | 18 J 0686 |
| 03 K 0318 | 19 K 0496 |
| 05 L 0074 | 13 L 0782 |
| 18 L 0801 | 25 L 0717 |
| 29 L 0945 | 07 M 0802 |
| 21 M 0318 | 21 M 0501 |
| 25 M 0790 | 33 M 0501 |
| 25 N 0494 | 31 N 0313 |
| 08 O 0234 | 13 O 0861 |
| 29 O 0559 | 02 P 0718 |
| 26 P 0016 | 08 Q 0208 |
| 21 Q 0242 | 10 R 0597 |
| 11 R 0313 | 19 R 0435 |
| 25 S 0077 | 31 S 0846 |
| 01 T 0715 | 03 T 0254 |
| 04 T 0977 | 06 T 0905 |
| 11 T 0431 | 16 T 0330 |
| 19 T 0341 | 22 T 0532 |
| 23 T 0948 | 23 T 0999 |
| 02 U 6657 | 10 U 0014 |
| 22 U 0683 | 32 U 0215 |
| 03 V 03 0 | 08 V 0037 |
| 22 W 0841 | 25 W 0670 |
| 28 W 0115 | 03 X 0847 |
| 05 X 0867 | 07 X 0547 |
| 15 X 0658 | 26 X 0924 |
| 27 X 0071 | 29 X 0208 |
| 29 X 0697 | 31 X 0450 |
| 01 Y 0283 | 27 Y 0693 |
| 31 Y 0020 | 32 Y 0353 |
| 06 Z 0620 | 13 Z 0680 |
| 17 Z 0183 | 23 Z 0129 |

(இவையாவும் உறுதிப்படுத்தப்படவேண்டும்,)

## புத்திரசிகாமணி...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

சட்: உதவிப் பதிவாளர் அதனை நிராகரித்தார்? -முதலில் பொறுப்பதிகாரி ரத்துச் செய்த விண்ணப்பம் உதவிப் பதிவாளரிடம் எப்படிச் சென்றது.

சட்: உமது 'பொறுப்பதிகாரியால் விசாரணை செய்யப்பட்டீர்? -இல்லை.

சட்; நீர் பொலநறுவா செல்லவில்லை, சம்பவமும் நடக்கவில்லை? சம்பவம் நடந்தது.

சட்; 400 ரூபா ஏன் கொண்டுசென்றீர்? நான் கொண்டுசெல்லவில்லை, பொலநறுவாவிலிருந்து கொண்டு வந்தேன்.

சட்: எப்படிக் கிடைத்தது? -இங்குள்ளவர்களிடம் கொடுக்கும்படி அங்குள்ளவர்கள் தந்தார்கள்.

சட்: நீர் மூக்குக்கண்ணாடி பாவிக்கிறவீரா? இல்லை. கூலிங்கிளாஸ்தான் பாவிப்பேன். (சிரிப்பு)

சட்: ஆகஸ்ட் 17ம் தேதிதான் கலவரம் உச்சநிலையிலிருந்தது? -உச்சநிலையிலிருந்ததோ, தாழ்ந்தநிலையிலிருந்ததோ எனக்குத் தெரியாது, நான் தாக்க்ப்பட்டதுஉண்மை (சிரிப்பு)

சட்: எப்படியாழ்ப்பாணம் வந்தீர்? லொறியிலும் பஸ்ஸிலும்.

சட்: அகதியாகவா? -அகதியென்றால் பல கருத்துக்கள் உண்டு. (சிரிப்பு)

லோகநாதன் கமிஷனர் அவர்களே, சில கேள்விகள் இந்தக் கமிஷன் விசாரணைக்கு உட்பட்ட கால எல்லைக்கு அப்பால் கேட்கப்படுகிறது.

கமிஷனர்: உமது போக்கை நிருபிப்பதற்கு கமிஷன் கால எல்லைக்கு வெளியிலும் சில கேள்விகள் கேட்கப்படுகிறது.

சட்: உம்மை இடம்மாற்றுவதாக பொறுப்பதிகாரி எப்ப சொன்னார்? -தேதி ஞாபகமில்லை, 77 நடுப்பகுதியில்.

சட்: பொறுப்பதிகாரிஉமதுசுடன் விண்ணப்பப் பத்திரம் தொடர்பாக உம்மீது நடவடிக்கை எடுத்திருக்கலாம்?. அப்படி ஏன் செய்யவில்லை'

(சிரிப்பு)

சட்: நீர் சுதந்திரக் கட்சிக் காலத்தில் எம். பி. யின் கடித மூலம் நியமனம் பெற்றீர்? அதனை நிருபித்தால் நான் பதவியை ராஜினமாச் செய்வேன்.

சட்; எம், பிக்களின் கடிதங்கள் பைலில் வைக்கப்படுவதில்லை? -அதைப்பற்றி எனக்குத் தெரியாது.

சட்: யூ. என். பி. ஆட்சி பதவிக்கு வந்தபின்' புத்திரசிகாமணியின் பிரயாணப்படி நிறுத்தப்பட்டதாக கூறினீர்? -அப்படிக் கேள்விப்பட்டேன்.

சட்: கலவரத் தாக்குதல் பற்றி பொலிசில் புகார்செய்தீரா?- ஒரு வருடத்திற்கு முன் நடந்தது. ஞாயகமில்லை. பொறுப்பதிகாரி புத்திரசிகாமணியின்பிரயாணப்படி பற்றி கேட்டால் சொல்லுவேன். (சிரிப்பு).

சட்: இதில் பிரயாணப்படி சம்பந்தப்படவில்லை?- அப்படியானால் கேட்கவேண்டியதில்லை. (சிரிப்பு).

சட்: புத்திரசிகாமணிக்கு ஒவ்வொரு மாதமும் பிரயாணப்படி மொத்தமாக 120 ரூபா வழங்கப்பட்டது தெரியுமா?- ஒதுக்கப்பட்டிருக்கலாம். அது சரியான முறையில் பிரயாணம்செய்தால் கிடைக்கும்.

சட்: ஒவ்வொரு மாதமும், பொறுப்பதிகாரிக்கு 120 ரூபா வழங்கப்பட்டது?- ஒதுக்கப்பட்டது தெரியாது. அவரால் எடுக்கப்பட்டது தெரியும். (சிரிப்பு).

சட்: ஒவ்வொரு மாதமும், பிரயாண விபரம் சமர்ப்பிக்க வேண்டும் என்று தெரியுமா?- எனக்கு தெரியாது. உபவேந்தர்தான் நிரந்தரகட்டளையை அங்கீகரித்தார். அவரிடம் தான் அதைக் கேட்கவேண்டும்.

சட்: இன்ஸ்பெக்டர் நோட் புத்தகத்தில், பொறுப்பதிகாரி கையெழுத்திடவேண்டும் என எந்த திரந்தரக்கட்டளையில் இருக்கிறது?- முழுதும் வாசித்துத்தான் பதில்சொல்ல வேண்டும். பொறுப்பதிகாரி ஒரு முதல்தர இன்ஸ்பெக்டராகும். ஆதலால் நோட் புக்கில் இன்ஸ்பெக்டர் கையெழுத்துப் போடவேண்டும்.

சட்: யார் சிரேஷ்ட இன்ஸ்பெக்டர்?- 6 இன்ஸ்பெக்டர்கள் இருக்கிறார்கள். சிரேஷ்ட இன்ஸ்பெக்டராக எவரும் நியமனம் பெறவில்லை.

சட்: சேவைமூப்பு அறிவதற்கு நியமன தேதியைப் பார்க்கலாம்?- அப்படியானால் பொறுப்பதிகாரி புத்திரசிகாமணி எனக்கு முன் சேர்ந்த சிரேஷ்ட உத்தியோகத்தர். (சிரிப்பு)

விசாரணை இன்று காலை தொடர்ந்து நடைபெறும். (க)

## சிங்களப்...

(5ம் பக்கத் தொடர்ச்சி)

கலையும் நான் நேசிக்கிறேன். அதனால்தான் அநுராகம் தமிழ்ப் படத்தையும் தயாரிக்க முன்வந்தேன், சிங்களக் கலைஞர்களுக்கு எத்தகைய வசதிகளை ஏற்படுத்திக்கொடுப்பேனோ அதைப்போன்று அநுராகம் நடிகர்களுக்கும் ஏற்பாடு செய்தேன்.

அநுராகத்தின் வெற்றியை தொடர்ந்து பல தமிழ்ப் படங்களை தயாரிப்பேன் என உறுதிகூறுகிறேன்'' என்றார்.


## மரண அறிவித்தல்

### டாக்டர் ந. கந்தசாமி

டாக்டர் நல்லதம்பி கந்தசாமி கனடாவில் காலமானார். இவர் திருமதி சீதாலக்ஷிமியின் அன்புக் கணவரும், செவ்வந்தி, செந்தூரன், ஹரிசங்கர் ஆகியோரின் அன்புத் தந்தையும், இளைப்பாறிய தலைமை ஆசிரியர் நல்லதம்பி, திரும்தி நல்லதம்பி ஆகியோரின் அன்பு மகனும் இளைப்பாறிய கலால் அத்தியட்சகர் பிறைசூடியின் அன்பு மருமகனுமாவார். ஈமக்கிரியை கனடாவில் நடைபெறும். உறவினர்களும் நண்பர்களும் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

0684


## புனித ஹஜ் பயணம்

(யாழ்ப்பாணம்)

யாழ். முஸ்லிம் வட்டாரத்தைச் சேர்ந்த பிரபல வர்த்தகரும் சமூகத் தொண்டருமான ஜனாப் ஏ. எம். மீரான் கண்டு புனித ஹஜ்ஜுக் கடமைகளை நிறைவேற்றும் பொருட்டு கடந்த புதன் கிழமை பயணமானார்.

சமூகப் பெரியார்கள், உற்றார், உறவினர், பொதுமக்கள் யாவரும் அவரை துஆப் பிரார்த்தனை செய்து வழியனுப்பிவைத்தனர். (இ)

## வி. பி. உரையாற்றுவார்

(யாழ்ப்பாணம்)

வைத்தீஸ்வரா உயர்தர மாணவர் மன்றத்தின் பொருளியல் கருத்தரங்கில், செந்தமிழர் இயக்கச் செயலாளர் திரு. வி. பொன்னம்பலம் "ஈழத்துப் பொருளாதாரப் பிரச்னைகளும் வழிவகைகளும்'' என்னும் தலைப்பில் இன்று மாலை உரையாற்றவுள்ளார்.

கருத்தரங்கிற்கு மாணவர் மன்றத் தலைவர் திரு. ஜி. கே. விஞயகமூர்த்தி தலைமை தாங்குவார். (கெ)

## இன்று நீதிமன்ற துப்பாக்கி கொள்ளை வழக்கு

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி நீதிமன்ற துப்பாக்கி கொள்ளை வழக்கு இன்று சாவகச்சேரி நீதிமன்றத்தில் விசாரணைசெய்யப்படவிருக்கிறது.

கடந்த தவணையின்போது 24 பேர் பிணையில் விடுதலை செய்யப்பட்டு 16 இளைஞர்கள் தொடர்ந்து றிமாண்டில் வைக்கப்பட்டிருந்தனர். இவர்களில் 7 பேரின் கைவிரல் அடையாளம் பதிவுசெய்யும்படி கட்டளையிடப்பட்டது. (க)


இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1978-ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 27-ம் தேதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu PostBox 19, Telegram Eelanaadu, Telephone 389. Registered Newspaper in Srilanka.


## சமூக சேவைகள் அமைச்சர் கைதடிக்கு விஜயம்

(மட்டுவில்)

சமூகசேவை அமைச்சர் திரு அசோக கருணரத்ன இம்மாதம் இரண்டாம் திகதி கைதடிக்கு உத்தியோகபூர்வமாக விஜயம்செய்வார்.

கைதடி சாந்தி இல்லத்தில் (வயோதிபர் இல்லம்) இரண்டு லட்சம் ரூபா செலவில் புதிதாக அமைக்கப்பட்ட விடுதியை அமைச்சர் உத்தியோக பூர்வமாக திறந்துவைப்பார்.

நவீன வசதிகளுடன் அமைந்துள்ள இப்புதிய விடுதியில் வயோதிபர் பாவிப்பதற்காக நூறு படுக்கைகள் அமைக்கப்பட்டுள்ளன'

## தமிழ் நாட்டில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ரிகை நிருபர்களிடம் பேசும் போது கூறினார். இலங்கை மீது இந்தியத் தலைவர்கள் மிகுந்த அன்புகொண்டிருக்கிறார்கள் என்றும் தமது பிரயாணம் நாட்டுக்கு நல்ல பயனளிப்பதாய் இருக்கும் என்றும் திரு ஜெயவர்த்தன நம்பிக்கை தெரிவித்தார்.

## நாளை நடக்கும் கருத்தரங்கு

[யாழ்ப்பாணம்]

சாவகச்சேரித் தொகுதி அபிவிருத்தி பற்றிய முதல் நிலைக்கருத்தரங்கு நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு பா. உ. பணிமனையில் சாவகச்சேரிப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. வ. ந. நவரத்தினம் தலைமையின் கீழ், சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் திரு. சு. முருகவேள் ஆரம்பித்து வைப்பார்.

இம்முதல் நிலைக் கருத்தரங்கில் இதொகுதியின் அபிவிருத்திக்குத் தேவையான புள்ளிவிபரங்களை எப்படிச் சேகரித்து முறைப்படுத்த வேண்டும் என்றும் அந்த மூலவளங்களின் விபரங்களைக் கொண்டு தொகுதியின் அபிவிருத்திக்கு 10 ஆண்டுத் திட்டத்தை ஆரம்பித்து ஆய்வுகள் நடாத்தப்படவும் உள்ளன.


# சிக்மா நீரிறைக்கும் இயந்திரப் பாவனையாளர்களுக்கும் விற்பனையாளர்களுக்கும் ஓர் அறிவித்தல்

சிக்மா சிறிய (யூனியர்) நீரிறைக்கும் இயந்திரம் தற்போது இங்கிலாந்தில் உற்பத்திசெய்யப்படும் விலியர்ஸ் என்ஜினுடன் இணைத்து விற்பனைசெய்யப்படுகிறது: இது தொடர்பாக இங்கிலாந்தில் விலியர்ஸ் என்ஜின் உற்பத்தி ஸ்தாபனத்தின் அதிபர் திரு. டேவிட்சான்கி எமது அழைப்பின்பேரில் யாழ்ப்பாணத்திற்கு நாளை 28ம் திகதி சனிக்கிழமை வருகிறார். இது தொடர்பாக இவரைச் சந்திக்க விரும்புவோர் கீழ்க்காணும் விலாசத்தில் தொடர்புகொள்ளவும்:- 50, முதலாம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். தொலைபேசி இல. 7050.

United Agro Engineering,
Navatkuli - Kaithadi.

Contract & Supplies (MFG) Ltd.
199, Vauxhall street,
Colombo-2.

0685